00506

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024**

**இறுதிப்பரீட்சை**

**மட்டம் - 05**

**EPU5552–ஆரம்பக்கல்விக்கான கல்வித் தொழில்நுட்பம்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 13.06.2025** **நேரம்:மு.ப 09.30 - பி.ப 12.30**

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**பகுதி – I**

1. "கல்வி தொழில்நுட்பம்" என்ற சொல்லை பொருத்தமான வரைவிலக்கணத்தை பயன்படுத்தி விளக்குக.
2. கற்றபவருக்கு தொழில்நுட்பம் எவ்வாறு உதவுகிறது? **ஐந்து (05)** விடயங்கள் மூலம் விபரிக்குக.
3. கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் ஆசிரியரின் **ஐந்து (05)** பொறுப்புக்களைச் சுருக்கமாக கலந்துரையாடுக.
4. "கல்வித் தொழில்நுட்பத்திற்கும் தகவல் தொடர்பாடலுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது"

   மேற்குறிப்பிட்ட கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா, **ஐந்து (05)** காரணங்களுடன் உங்கள் பதிலை நியாயப்படுத்துக.
5. தொடர்பாடல் செயன்முறையை (Communication Process) வரைபடத்துடன் விபரிக்குக.
6. இணையத்திலிருந்து மாணவர்கள் பெறக்கூடிய நன்மைகள் என்ன? **ஐந்து (05)** விடயங்கள் மூலம் விளக்குக.
7. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் புதிய தொழில்நுட்பத்தை இணைக்க முயற்சிக்கும் போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **ஐந்து (05)** சவால்களை பட்டியலிடுக.
8. கற்பித்தல் முறையாக பிரச்சினை தீர்க்கும் முறையின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

**பகுதி – II**

9. i. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களை இணைக்கக்கூடிய **ஐந்து (05)** கற்பித்தல் முறையை பட்டியலிடுக.

   **(05 புள்ளிகள்)**

   ii. மேற்குறிப்பிட்ட **இரண்டு (02)** கற்பித்தல் முறைகளையும் உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

   **(08 புள்ளிகள்)**

   iii. இலங்கையின் ஆரம்ப வகுப்பறைகளில் கற்பித்தலின் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

   **(07 புள்ளிகள்)**

10. i. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கற்பித்தல் நுட்பம் என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

ii. டேலின் அனுபவக் (Dale's Cone) கூம்பை வரைபடத்துடன் விபரிக்குக.

(07 புள்ளிகள்)

iii. வகுப்பறையில் நீங்கள் கற்பிக்கும் பாடத்திற்கு ஏற்ப வெவ்வேறு கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

(08 புள்ளிகள்)

11. i. உண்மையான வகுப்பறையில் (Actual Classroom) கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ii. பயனுள்ள கற்பித்தலுக்கான கற்பித்தல் கருவிகளைத் தேர்ந்தெடுக்கும் போது நீங்கள் கருத்தில் கொள்ளும் காரணிகள் யாவை? உதாரணங்களுடன் குறைந்தது **ஐந்து (05)** காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

12. i. தற்கால கற்றல் கற்பித்தல் சூழலில் தற்போதைய ஆசிரியரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

ii. வகுப்பறையில் மாணவர் மைய அணுகுமுறையைப் பயன்படுத்தும்போது ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன? உதாரணங்களுடன் குறைந்தது **ஐந்து (05)** சவால்களை விவரிக்குக.

(10 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டு (02)** குறித்து சிறுகுறிப்பை எழுதுக.

i. பாடக்குறிப்பைத் தயாரிப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரணிகள்.

ii. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் பல்லூடகத்தை (Multimedia) பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.

iii. கற்றல் கற்பித்தல் கண்டுபிடிப்பு முறையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.

iv. பல் தர கற்பித்தல் (Multi Grade teaching)

(10x2=20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -